திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Women of Epic Perunkathai

S. Jessintha[1], Dr. B. Jaiganesh[2]

Part time Research Scholar[1], Head of Department[2], Department of Tamil, SRM Institute of Science and Technology, Kattankulathur, India

Manuscript ID : **MT146A0144**

Volume : **3**

Issue : **3**

Month : **September**

Year : **2023**

Received: 14.07.2023
Revised: 05.08.2023
Accepted: 22.08.2023
Published: 15.09.2023

Pages : 08-27

DOI: 10.5281/zenodo.8347447

ABSTRACT:

There is no poet who does not sing about femininity. As Perunkathai is an epic of state civilians, it is accompanied by great women like Vasavatha, the king's daughter, Padumavati, Mananikai, Virisikai, (the four wives of Perungatha hero Udayana) along with them Prachodhana Devi, Vasavatha's friend Kanchanamalai, Padumapati's friend, Sankyathai, Udayana's mother Mrigapati, Madana Manjikai, dramatist Narumatha, Bhadrapati etc. The role of these women played a essential part in this great epic.

KEYWORDS:

Women Power, Perunkathai, Role of Women, Art, Culture, Political Ethics

பெருங்கதையில் மகளிர்

சு. ஜெசிந்தா[1], முனைவர் பா. ஜெய்கணேஷ்[2]
பகுதி நேர ஆய்வாளர்[1], துறைத்தலைவர்[2]
தமிழ்த்துறை, எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், காட்டாங்குளத்தூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

பெண்மையைப் பாடாத புலவர் இல்லை எனலாம். பெருங்கதை அரச காப்பியமாதலால் அரச மகளிரான வாசவதத்தை, பதுமாவதி, மானனீகை, விரிசிகை என பெருங்கதை நாயகன் உதயணனின் மனைவியர் நால்வருடன், பிரச்சோதனன் தேவியர், வாசவதத்தையின் தோழி காஞ்சனமாலை, பதுமாவதியின் தோழியர், சாங்கியத்தாய், உதயணனின் தாய் மிருகாபதி, மதன மஞ்சிகை, நாடகக் கணிகை நருமதை, பாகீரதி, பத்ராபதி, பணிப்பெண்டிர், பரத்தையர் என மற்றெந்த இலக்கியத்திலும் இடம்பெறாத அளவு பெருங்கதையில் மகளிரின் பங்கு காணப்படுகிறது.

கருச்சொற்கள்

பெண் சக்தி, பெருங்கதை, பெண்களின் பங்கு, கலை, கலாச்சாரம், அரசியல் நெறிமுறைகள்

முன்னுரை

பேசும் மொழி தாய்மொழி கல்வியின் தலைவி கலைமகள்; செல்வத்தின் தலைவி திருமகள்; வீரத்தின் விளைநிலம் கொற்றவை; உடல், உள்ளத்தைத் தூய்மைப் படுத்தி ஓடும் ஆற்றுநீர் அன்னை காவிரி இவரு உலகில் பெண்மையே முதலிடம் பெற்றுள்ளது.

"பெண் கோடியாக நடந்து உலகே"[1]

உலக நடப்பிற்கே பெண்ணியல்பே காரணம் என்கிறார் திருமூலர்.

**"உயிரினைக் காக்கும், உயிரினைச் சேர்த்திடும்
உயிரினுக் குளிரை இன்பமா கிடும்
உயிரினும் இந்த பெண்மை இனிதடா
ஊது கொண்புகள் ஆடுகளை கொண்டே"[2]**

என இருபதாம் நூற்றாண்டுக்கு கவிஞன் பாரதி பாடியுள்ளார். இங்ஙனம் உயிரினும் இன்பம் பயக்கும் மகளிரின் பெண்மை, மென்மை, கற்பின் திண்மை, தியாகம், பொறுமை, விட்டுக் கொடுத்தல், தாய்மை, காலை உணர்வு முதலான பண்புகளுடன் உயர்வாகப் போற்றப்படும் பெருங்கதைப் பெண்களை பெருங்கதைக் காப்பியம் மூலம் காண்பதுவே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

பெருங்கதை கூறும் பெண்மை

கொங்கு வெளிர் பெருங்கதை நாயகி வாசவதத்தையை அறிமுகம் செய்யும்போது,

"தெய்வத் தாமரை திருமகட் கொடுத்தோர்
ஐயப்ப படூஉ மணியிற் கேற்ப
ஒண்மையு நிறைய மோங்கிய ஒளியும்
பெண்மையும் பெருமையும் புறவு முடைமையிற்"[3]

எனப் பெண்மைக்குரிய இயல்புகளைக் கூறி அறிமுகப் படுத்தும் வரிகளில் பெண்மை எனும் சொல் அமைந்துள்ளது. அங்ஙனமே உதயணன் பதுமாபதியைத் திருமணம் முடித்த பின்னர், முதல் மனைவியான வாசவதத்தையிடம் இரண்டாவது மனைவியின் அழகினை ஊடலுக்காக நலம் புனைந்து புகழ்கின்ற போதும்,

“பருகுவனன் பொழப்பு பல்லூழ் முயங்கி
உருவினல்லது பெண்மை யினின்னொடு
திருநுதல் மடவோய் தினையனைத் தாயினும்
வெல்வெற் கண்ணி யொவ்வா ளென்றவள்
உனக்கும் வாயிலைத் தகக்கூறி”[4]

என்றவிடத்தும் பெண்மை என்ற சொல் இடம் பெற்றுள்ளது. மேலும் பெண்மையைக் குறிக்க. "பெண்மை, பெண்ணருங்கலம், பெண்ணீர்மை, அதிநாகரிகை”[5] என்பதனை சொற்களாலும்,

“மாதவர் மகளை வந்த துகளறு சீர்த்தி”[6]

அதாவது சிறப்புகளைக் கொண்ட பெண்ணாக உதயணனின் நான்காவது மனைவி விரிசிகையை ‘சீர்த்தி’ என்ற புதுச் சொல்லாக்கத்தாலும் சிறப்பித்து கொங்கு வேளிர் பெண்மையை உயர்வுபடுத்திக் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு செல்வங்களுக்குள்ளும், பெண்டிரே பெரும் பொருள் ஆவர்; உயிரெனப்படுவோர் பெண்டிரே,

"எண்ணரும் பல்லுயி ரெய்தும் வெறுக்கையுட்
உயிரெனப் படுவதுரிமை யாதலிற்"[7]

என்பதையும் பெருங்கதைச் சுட்டுகிறது.

பண்பிலுயர் பெண்கள்

உயிரெனப்படும் பெண்களை, தியாகம், பொறுமை, நுண்மாண் நுழைபுலம், கலைப்பயல் வன்மை, நன்றியறிதல், சேவையுள்ளம் எனப் பல பண்புகளில் உயர்ந்தவர்களாக, காப்பியத்தின் பல பொறுப்புகளைத் தாங்குபவர்களாகவும் கொங்குவேள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

வாசவதத்தை

உதயணன் மனைவியரும் முதன்மையான வாசவதத்தையும் உதயணனும் முதன்முதல் ஒருவரை ஒருவர் கண்டபோதே

“நோக்கினால் நோக்கி இறங்கினால் அஃது அவள்
யாப்பினுள் அட்டிய நீர்”[8]

அவள் என்னை நோக்கினால்; யாங்கண்டதும் நானித் தலை குனிந்தாள். அக்குறிப்பு எங்களின் அன்புப் பயிறுக்குவார்த்த

நீராகி, கண்டா போதே இருவர் உள்ளமும் ஒன்று கலந்தன என்பதை

“மதக்களிறு இரண்டுடன் மண்டி யாஅங்கு
...ஒருவயிற் போல உள்ளழி நோக்கமொடு
இருவயின் ஒத்து”[9]

பெருக்கத்தையும் விளங்குகிறது. எங்கோ, எண்ணத்திலோ பிறந்த தலைவனும் தலைவியும்

“தென்கடல் இட்டதோர் திருமணி வான்கழி
வடக்கடல் நுகத்துளை வந்துபுக் காங்கு”[10]

ஓரிடத்தில் சந்தித்துக் கூடினர். இருவரும் கண்டவுடன் காதல் கொண்டனர். தமிழ் மகளிர் நெஞ்சம் தாகவுடைய இடத்திலேயே செல்லும். வாசவதத்தையின் உள்ளமும் உதயணன் பால் சென்றது. இறுதிவரை மாறாது உறுதியாக நின்ற அக்கற்பின் திண்மையே அவளைக் காப்பியத் தலைவியாக உயர்த்தியது எனலாம். இல்லற நெறியில் பிறழ்தல் இல்லாத நிறையாகிய திண்ணிய கொள்கையுடைய கற்புடைப் பெண்டிரேக் கொங்குவேள் உத்தம மகளிர் (முதன்மை மகளிர்)

"ஞாலந்திரியா நல்நிரைத் திண்கோள்
உத்தம மகளிர்"[11]

என்றும், இத்தொன்மையுடைய மகளிர் நிலம் பெயர்ந்தாலும், விசும்பு வீழ்ந்தாலும் கலங்காது கடமையாற்றும் மனவுறுதி படைத்தவர்,

"நிலம்புடை பெயரினும் விசும்புவந்து இழியினும்
காலங்கள் கடவுள்நின் கற்பு"[12]

என்பதுடன் வாசவசத்தையின் சிறப்பை அவள்தான் பெருமையுடன் இணைந்துக் கூறுகின்றார் கொங்கு வேளிர்

"திருமகள் போல ஒருமையி நொட்டி
உடன்முடி கவித்த கடனறி கற்பின்
இயற்பெருந் தேவி வயிற்றகத் தியன்ற
வெட்டப் பெரும்பூண் வாசவ தத்தை"[13]

என்பதாலும் வாசவாதத்தையின் பண்புநலன் புலப்படுகிறது. மேலும் வாசவாதத்தை அன்பு, நாணுடைமை, இரக்கம், வாய்மை, ஒப்புரவு, என்னும் சால்பினோடு சினத்தை மாற்றிக்கொள்ளும் இயல்பினையும் கொண்டவளாக விளங்குகிறாள். உலகில் தமது தோல்வியைத் தோல்வி என எவரும் ஒப்புக் கொள்வதில்லை. வாசவதத்தையோ மாமன்னன் ப்ரச்சோதனன் மகளாயினும், உதயணன் முதல் நாயகி என்னும் உயர்நிலைப் பெரிதென எண்ணாமல், தனது கணவனின் மூன்றாம் மனைவியாக வரும் மானனீகையிடம் சினத்தின் காரணமாகத் தான் செய்த தவற்றை மன்னிக்கும்படி

"குழூஉக்களி யானைக்கு கோசலன் மகளே!
அழேற்க எம்பாவாய்! அரும்பெறல் தவ்வை!
செய்தது பொறு!"[14]

வேண்டுகிறாள்.

"சால்புக்குக் கட்டளையாதெனின் தோல்வி
துளையலார் கண்ணும் கொளல்"[15]

சால்புக்குக் கட்டளையாதெனின் தான் தோல்வியைத் தனக்கு ஒப்பாகாதவரிடத்தும் கொள்ளுதலே யாகும் என்ற குறள் வழி வாசவதத்தை, மானனீகையிடம் வேண்டுவது சால்பின் சிகரமாக அமைந்ததுடன், மன ஒருமைப்பாடும் அறிவுக்கு கூர்மையும், கலைநயம் மிக்கவளாகவும் காணப்படுகிறாள். வாசவதத்தை பயின்ற மகர யாழிசை பலராலும் புகழும் வண்ணமும், இனிய இசையை யாழிலே

எழுப்பும் திறமும், அதற்கேற்ற மிடற்றிசையைச் சேர்க்கும் திறமும் இயல்பும், காலை நலமும் வாசவாதத்தை பெற்று விளங்கியதாகப்

"யாணர் கூட்டத்தி யவனக் கைவினை
மாணப் புணர்ந்தோர் மகரவீணை"[16]

பெருங்கதைக் காப்பியம் சுட்டுகிறது. உதயணன் வாசவதத்தையைக் கவர்ந்து கொண்டு மணத்தல் முதல் நிகழ்வாகவும், உதயணன் அரசுரிமையைக் காக்க மேற்கொண்ட வாசவதத்தையின் மறைவு ஒருதிருப்பமாகவும், கோசாம்பியின் ஆட்சியைப் பெறுவது உச்சமாகவும், வாசவதத்தை மீண்டும் வருதல் வீழ்வாகவும், நரவானதத்தனைப் பெறுதல் முடிவாகவும் அமைந்துள்ள பெருங்கதையில் வாசவதத்தை இல்லையானால் உதயணனின் கலைத்திறம், இசை பயில் வல்லமை, யானை அடக்கும் வீரமும் நிலைபெற்றிருக்காது.

தத்தை மேல் கொண்ட காமத்தில் மூழ்கி தன்னை நாட்டை மறந்த உதயணனை மீட்க, வாசவதத்தைக்கு மறைவு ஏற்பட்டதாக வதந்தி பரப்பி அரண்மனைக்குத் தீ மூட்டி வாசவதத்தை மறைந்து வாழ்ந்த காலத்தில், உதயணனைத் தேற்ற வழியின்றி, இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் வல்லமை பெற்ற முனிவர் இராசகிரியம் நகரில் இருப்பதாக கூறி இராசகிரியத்தின் புறத்தொடுங்கியபோது பதுமாபதியை உதயணன் காண, வாசவாதத்தை போலத்தோற்றம் கண்டு அழகில் மயங்கி இருவரும் காதல் கொள்கின்றனர். தத்தையின் பிரிவு, அரசுரிமை இழப்பு இதனிடையில் தான் உதயனின் இழப்பை ஈடு செய்ய வருகிறாள் பதுமாபதி.

பதுமாபதி

உதயனின் இரண்டாவது தேவி பதுமாபதி. இவள் மகத நாடு மன்னன் தருகசனின் தங்கை. இவள் தாய் உதயையோடை. உதயணன் தேவியர் நால்வருள் அரசியல் காரணமாக இவள் மணம், நிகழ்கின்றது. சீவக சிந்தாமணியில் சீவகன் தன் பகைவனைக் கொன்று ஆட்சியைப் பெற சிலமகளிரை மணப்பது போல, உதயணன் தன் பகைவரை வென்று ஆட்சியை மீண்டும் கைப்பற்ற பதுமாப்பதியின் திருமணம் உதவுகிறது. மற்றதேவியரின் திருமணம் இவ்வாறு நிகழவில்லை. மகத நாட்டின் தலைநகரான இராசகிரியத்துக்கு உதயணனின் அமைச்சர்கள் அழைத்துச் சென்று உடனுறைந்த போது, அங்கே காமன் கோயில் விழாவிற்கு வந்த பதுமாபதியைக் கண்ட உதயணன், வாசவத்தை போன்ற உருவத்தோற்றமும் பேரழகும் பெற்றிருந்த பதுமாப்பதியிடம் உள்ளம் ஈடுபடுகிறது. இதனை,

“கண்ணுறக் கண்ட தன்னமற் காதல்
மானேர் நோக்கின் வாசவ தத்தை
தானே இவள் எனத்தான் தெரிந்துனரான்”[17]

எனக் குறிப்பிடுகிறார் கொங்கு வேளிர். அந்தணன் வடிவில் பதுமபதியைக் காதலித்து வந்தான் உதயணன். இருவரும் கந்தருவ மணம் செய்து கொண்டனர். பதுமபதி தன் தோழி யாப்பியாயின் உதவியுடன் உதயணனை கன்னிமாடத்துள் அழைத்து வந்தாள். உதயணன் அந்தணன் தோற்றத்தில் மகத மன்னன் தருகசனுக்கு அவனது தந்தை மறைத்து வைத்திருந்த புதையலை இருக்குமிடம் காட்டி, தருகச்ன மனதில் இடம்பிடித்து அரண்மனையில் தங்க அனுமதி பெற்ற வேளையில் தருகச்ன நாட்டின் மேல் பகை மன்னன் எண்மார் படையெடுக்க, உதயணன் தன் சூழ்ச்சியால் அமைச்சர் தம் உதவியுடன் தருகச்சனி பகைவர்களை புறமுதுகிட்டோடச் செய்யவே, தருகாசன் தன் தங்கை பதுமபதியாய் உதயணனுக்குத் மணம் செய்வித்து உதயணன் அரசியல் வெற்றிக்கு அடித்தளம் அமைத்தான். பதுமபதி வாசவாதத்தைக்கு அடுத்த நிலையில், சிறந்த அழகியாகவும் பண்பாடு உடையவளாகவும் விளங்குகிறாள். உதயணன் அரசுரிமை ஏற்றபின் தத்தை மீண்டும் வருகிறாள். நடந்தவற்றையெல்லாம் கேட்ட உதயணன் தத்தையை ஏற்றுக் கொள்ள பதுமபதி இவை கற்பில் சிறந்தவள் எனக்கூறி, பல நாட்கள் பிரிந்திருந்த வாசவதத்தையைப் பிரியாமல் இருக்கும்படி,

“பெருந்தக்க கற்பின் எம்பெருமான் தன்னொடு
பிரிந்த திங்களெல்லாம் பிரியாது
ஒருங்கவன் உரைத்தல் வெண்டுவன் அடிகள்”[18]

என உதயணனை பிரியாதிருக்க வேண்டுகிறாள். இங்ஙனம் பதுமை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, பிறர் குற்றம் பாராட்டாமை, கொண்டு விளங்குகிறாள். கல்வி கேள்விகளில் சிறந்த இவள் பிறர்பால் பொறாமை கொல்லாத பண்பின் காரணமாக வாசவாதத்தையின் அன்பை எளிதாகப் பெறுகிறாள்.

“பயன் உணர் கோபி பதுமபதி”
“பண்பார் சாயல் பதுமபதி”
“பழிப்பில் காரிகை பதுமபதி”[19]

எனப் பாரட்டப்படுகிறாள். உதயணனும் மானனீகையும் கொண்ட காதலைக் கண்டித்து, வாசவாதத்தை மானனீகையின் கூந்தலை நறுக்கும்படி ஆணையிட்ட பொழுது பதுமபதி,

“சீறி யருளுதல் சிறுமை உடைத்திது;
வீரியர் மடந்தை வேண்டா செய்தனை,

அன்புடைக் கணவர் ஷீதகச் செய்யினும்
பென்பிறந் தோற்குப் போரையே பெருமை”[20]

வாசவாதத்தைக்கு அறிவுரை கூறும் துணிவும் தெளிவும் பதுமைப்பதியிடம் இருந்தமையும், கூறும் மொழிகள் பெண்ணின் பெருமையை உயர்த்துவதாகவும் அமைந்துள்ளது. இயற்கை அறிவு, விரும்பத்தக்க தோற்றம், ஆராய்ந்த கல்வியறிவு இம்மூன்றும் பொருந்தியவளாகவும் விளங்குகிறாள் பதுமை என்னும் தூதி.

“அன்பு உடைமை ஆந்திரகுடிப்பிறத்தல் வெந்து அவாம்
பண்பு உடைமை தூதுஉரைப்பான் பண்பு”[21]

தன நாட்டின் மீது அன்பும், உயர்ந்த குடிப்பிறப்பும், வேந்தன் விரும்புகின்ற உயர்ந்த பண்புகள் அமைத்தாலும் தூது உரைப்பவனுக்கு வேண்டிய பண்புகள் என்பதற்கேற்ப பதுமை தூது செல்கிறாள். மாமன்னன் வாசவாதத்தையின் தந்தை பிரச்சோதனன் உதயணனுக்கு நட்பு நாடி தூது விட,

“தொகச் சொல்லித் தூவாத நீக்கி சொல்லி
நன்றி பயப்பதம் தூது”[22]

வேற்றராசைகளுக்குப் பலவற்றைத் தொகுத்துச் சொல்லியும், பயனற்றவை நீக்கியும், இனிய சொற்களால் மகிழுமாறு சொல்லியும் தன அரசனுக்கு நன்மையைச் செய்ய வள்ளுவர் வழியில்,

“மண்ணின் மன்னர்க்குக் கண்ணென வகுத்த
நீதி நன்னூ லோதிய நாவினள்
..நல்லோர்
துணிந்த நூற்பொருள் செவியுளங் கெழீஇப்
பணிந்த தீஞ்சொற் பதுமை என்னும்
கட்டுரை மகளோடு கருமநுனித்து”[23]

பதுமை என்னும் பெயருடையவளும் பொருள் பொதிந்தமொழி பேசுதலை உடையவளும் ஆகிய தூதி எனப் பெருக்கத்தையும் பதுமைப்பதியின் இயல்புகளை எடுத்துஉறைகின்றது. சினமும், குன்னமும், தாய்மையும், ஆளுமையும், தியாகமுமான கோலாகலமாக விளங்குகிறாள். வாசவதத்தை பொருளைப் பண்பைக் கவசமாகக் கொண்டு பொறுமையின் சிகரமாக விளங்குகிறாள் பதுமை. இங்ஙனமாக உபிஹாயாணனும் தேவியரும் அன்பு பெறுக இன்புற்று அமருங் காலத்தே நிலைபெற்ற பெரிய சிறப்பினையும் வீரமிக்க பேராற்றலைமுடைய வீறுபெற்றஉயர்ந்த நெடிய புகழுடைய அவனது மன்னன், தன பகைவனாகிய ஆருணியரசனைக் கொன்று அவனது அரண்மனையில் ஆராய்ந்து கைப்பற்றிய அறிய கலைத்திறன் உடையோரும், நாள்

தோறும் ஆடுதலும் பாடுதலும், பந்தாடுதலும் பதுமபதிக்கும் நன்கு கூறு செய்து உதயணன் வழங்கி குலாப் போன வேளையில் தேவியர் இருவரும் தோழியரை இருகூறாகப் பிரித்து எதிர் நிறுத்தித்தோழியருடைய பந்தாட்டத்தினைக் காணும் பொது தெய்வமகள் போன்ற சாயலையும், திருமகளைக் கந்தர் போன்ற அழகு மிகு கண்களையுடையவளும் கோசலமன்னன் தோழியும் ஒருத்தியாக இருந்தவள்.

மானனீக்கை

உதயணனின் வெற்றியின் பரிசாக வாசவதத்தையின் பணிப் பெண்ணாக வந்தடைகிறாள். இம்மானனீக்கை உதயணனின் மூன்றாம் மனைவி. யவன மொழி அறிவும், ஒப்பனைக் கலைத்திறனும், பந்தடிக்கும் கலை இவற்றிலும் வல்லவளான மானனீக்கை, பற்பல முறைகளாலே இடையறவின்றி எண்ணாயிரங்கை, கறங்கு போல் சுழன்று, மாறி மாறி அடித்து தோழியர் அனைவரையும் பந்தடிலும் அழகிலும் விஞ்சி நின்றதைக் கண்ட உதயணன் பிடிமிசைச் சென்று கண்டதும் மானனீக்கை விரும்பியமையைப்

"பைந்தொடி மாதர் பற்பல வகையால்
எண்ணா யிரங்கை யேற்றின ளேற்றலும்"

"பூண்டிகழ் கொங்கைப் புயலேர் கூந்தல்
மாண்குளை புதுநலங் காண்டகச் சென்ற
உள்ளாந்தன்னை யொறுப்படுக் கல்லா
வெள்ளத் தானை வேந்தன் பெயர்ந்து
பிடிமிசைத் தோன்றலும்"[24]

பெருங்கதை பலவாக விரித்துரைக்கின்றது. அழகு, கலைத்திறன் மட்டுமன்றி யவன மொழிப்பயிற்சியும் ஒருங்கே அமைந்து காணப்படுகிறாள். கலைவன்மை கொண்ட பணிப்பெண் மானனீகையிடம் தன் மனைவியின் முகத்தையே ஏடாகக் கொண்டு யவன மொழியில் எழுத உதயணனுக்கும் மானனீகைக்கும் பிறமொழி அறிவும், ஒப்பனைக் கலையும் காதல் செய்தியை வெளிப்படுத்த உதவின.

"நினைத்த வாசக நிரப்பின் றெழுத
இடைத்தள விண்மையிற் கரித்தறி வோர்க்குப்
பரிந்துரைத்த தென்னை பாவை யிக்குறை"[25]

உதயணன் தான் எண்ணிய மொழிகளை எல்லாம் நெற்றியில் இடம் இன்மையாலும், நின்போன்ற அறிவுடையோருக்கு விரித்துரைக்க வேண்டாம் எனக் கூறுவதன் கண் மானனீகையின் மொழி அறிவையும் பாராட்டுவதனை அறிய முடிகிறது. உதயணன் விரும்புவதை மானனீகை ஏற்காமல்,

"சிறியோர்க் கருளிய வுயர்மொழி வாசகம்
இயைவ தன்றா லிவ்வயி னொறுவரும்
கானாரென்று காவலு ளிருந்து
பேணா செய்தல் பெண் பிறந் தோருக்
கியல்பு மன்றே"[26]

இவ்விடத்தே நாம் மறைந்து செய்யும் செயல்களை யாரும் காணமாட்டார் என்றும், எண்ணி காதல் அமைந்த இடத்தில் இருந்து கொண்டு சான்றோரால் விரும்பப்படாத செயல்களைச் செய்தல் அடியேன் போன்று பெண்ணாகப் பிறந்தவர்களுக்குத் தகுதியுமன்று. தகுதிக்கு மிக மிகத் தாழ்ந்த என்பால் வைத்தே நினைவை மறந்து விடுதலே நல்ல காரியம் என்று பணிப்பெண்ணாயினும் சான்றான்மையுடன் மன்னன் காதலை ஏற்காது உயர்ந்த பண்புடன் விளங்குகிறாள். உதயணனின் காதல் உள்ளம் அறிந்து வாசவதத்தை சினம் கொண்டு மானனீகையைத் துன்புறுத்தும் வேளையில் ஓலை ஒன்று வருகிறது. மானனீகை வாசவதத்தையின் சிற்றணையின் மகள், கோசலத்தரசன் மகள் என்பது தெரியவே வாசவதத்தை தங்கையான மானனீகையிடம் மன்னிப்பு கேட்டு

"முரசு முழங்குமுற்றத் தரசுவந் திறைகொளக்
கோலத்தேவியர் மேவினர் கொடுப்ப
ஓவியருட்கு முறுதியை யுதணன்
நான்மறை யாளர் நன்மணங் காட்டத்
தீவலஞ் செய்து கூடிய பின்றை
முற்றிலை மகளிர் மூவரும் வழிபட"[27]

வாசவதத்தையும் பதுமாபதியும் பெரிதும் விரும்பி மானனீகையை உதயண மன்னனுக்கு நான்மறை ஓதி அந்தணர் மணச்சடங்குகளை முன்னின்று நடத்தத் தீவலஞ் செய்து திருமணம் செய்து மானனீகை உதயணனின் மூன்றாம் மனைவியானதுடன், உதயணனின் திருமண நிகழ்வு நின்றுவிடவில்லை. உதயணனின் நான்காவது மனைவியாக வருகிறாள் விருசிகை.

விருசிகை

இவள் ஓர் அரச இருடியின் மகள். வித்யாதர அரசனாக இருந்து நன்மக்களைப் பெற்றப்பின் ஆண் மக்களை அரசியற்பூட்டி, சான்றோர் மேற்கொள்ளும் மிக்க தவத்தை விரும்பி மனைவி நீலகேசி என்ற காசியரசன் மகளுடன் கெடாத கற்பினை உடைய விரிசிகை என்னும் பெண்மகவை மட்டும் தன்னுடன் கூட்டி, கானகத்தே தவக்குடிலில் ஒழுகி வாழ்ந்தார். உதயணமன்னன் இலாவாண நகரத்தில் அரசு வீற்றிருந்தான்.

அந்நாளில் வாசவதத்தை மற்றும் பரிவாரங்களுடன் கானகம் சென்று உண்டாட்டு நிகழ்த்திய காலத்தில் ஒருநாள், தவ ஒழுக்கத்தின் மிக்கவனும், நீண்ட சடைமுடியும், குற்றமற்ற நற்காட்சியினையும் உடைய துறவியின் மகளும், கருங்குவலை மலர் மலர்ந்தாற் போன்ற பெரிய விழிகளையும், ஒழுங்கினாற்போன்று நீண்ட மூக்கினையும், வில்லையொத்த புருவங்களையும், தேன் பொதிந்தது போன்ற இனிய மொழியையும், சிவந்த வாயையும் அணிகலனாக உடைய "விருசிகை" என்னும் பேதைப் பருவத்தாளை (சிறுமியை) கண்டான். அவளோ கானகத்து மலர்களைப் பறித்துத் தொடுத்துக் கொண்டிருக்க, அவை உதிர்ந்து போக செய்வதறியாது அமர்ந்திருக்க, இதனைக் கானகத்தே வந்த உதயணன் கண்டு அச்சிறுமியின் கையிலிருந்த மலர்களைத் தான் வாங்கி அழகுறக்கட்டி அவளைத் தன் மடியில் அமர்த்தி சூட்டிவிட்டான். வாசவதத்தையும் உண்டாட்டில் இருந்தமையால் இதனை அறிவாள். ஆனால் விரிசிகை என்னும் அச்சிறுமி, தான் அறிவதற்குரிய பொருளை அறிய மாட்டாத பேதைப் பருவம் நீங்கி, பெதும்பைப் பருவம் எய்தியபோதும், பேதைப் பருவத்தில் தன்கூந்தலில் உதயணன் சூட்டிவிட்ட மலர் மாலையை அணிந்தபின் பிறமலரை அணிந்து அழகு செய்யாமல் "உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர்" என்னும் அறம்பற்றித் தன்னைத் தீண்டி மலர் சூட்டிய உதயணனுக்கே கற்புக் கடம் பூண்டுஒழுகும் ஒழுக்கத்துடன் இருப்பதை அறிந்த அவளது தந்தையான முனிவர், உதயணன் அரண்மனை சென்று உதயணனுக்கும் விருசிகைக்கும் நடந்த அந்நிகழ்வைக் கூறி, நான், என் மகளை உனக்குத் தருகிறேன் ஏற்றுக்கொள் எனக் கூறுவது இயல்பன்று ஆயினும், நீயே அவளுக்கு மலர் சூட்டி மகிழ்வித்தவன் ஆதலால் அவள் உன் பத்தினியே ஆவாள். மணநாள் குறிப்பிட்டுத் திருமணம் செய்வது நன்றாகும் எனக்கூற, உதயணன் திருமணச் செய்தியை நெஞ்சு காத்தலில் சிறந்த கோப்பெருந்தேவியாகிய வாசவதத்தையிடம் கூறவே, வாசவதத்தையும் மெய் தொட்டுப் பயின்றதனை அறிந்திருந்ததால், மணம் செய்யாவிடின் உதயணனுக்குப் பாவமும் பழியும் ஆதலின் ஊடாமல், மனம் மகிழ்ந்து, பெருமானே இக்காரியம் மிகவும் நன்றே எனக் கூறினாள். வாசவதத்தையை,

> **"மணிப்பூண் வனமுலை வாசவ தத்தை**
> **பணித்தற் கூடாள் பண்டே யறிதலின்**
> **உவந்த நெஞ்சமொடு நயந்திது நன்றென**
> **அரிதிற் பெற்ற அவந்திகை யுள்ளம்**
> **உரிதி னுணர்ந்த உதயண குமரன்**
> **ஓங்குபுகழ் மாதவ னுரைத்தற் குடம்பட்டு"**[28]

அவளின் அச்சிறப்புக் கருதி, அப்பெறுமகளை அரிதற் பெற்ற அவந்திகை என பெருங்கதையும் குறிப்பிடுகின்றது. உதயணனின் நலன் ஒன்றையே பெரிதென எண்ணி வாழும் வாசவதத்தை, திருமணத்திற்கு சம்மதம் தந்ததும் கற்பும், திண்மையான மன

உறுதியும், அணிகலன் இல்லாத உடலுமாகிய விரிசிகை தன் அழகினால், தான் ஒப்பற்றவள் என நகரமாந்தர்க்கு அறிவிக்க கோசம்பி நகர வீதியில் காலாலே நடந்து வருவாளாக என்று அறிவித்து வழிநெடுக கால் உறுதாதிருக்க மலர்களைப் பரப்பச்செய்தான் உதயணன்.

"பிடியுஞ் சிவிகையும் பிறகும் புகா அள்
இடுமணல் வீதியு ளியங்குநள் வருகெனப்
பெருமகன் அருளினன்"[29]

விரிசிகையின் தந்தையான முனிவரோ, மாந்தர் பலரும் காணும்படி விருசிகை இயங்குதல் ஆற்றாது, பெரும் நாணத்தால் அத்துறவி தம்மக்களுக்கு நாணுத்தரீகம் என்ற மேலாடையை இட்டு அதனை அவள் ஒரு கையால் தாங்க வைத்து மற்றொரு கையில் குவளை மலர்களைக் கொடுத்து, உதயணனின் அரண்மனை மகளிர் காஞ்சுகி மக்களிடம் ஒப்படைக்கச் சொல்லி அனுப்பி வைத்த பின், முனிவர் தம் மனைவி நீலகேசியை அழைத்து, நமது மகளைக் குற்றமற்ற பெரும் புகழுடைய வத்தவர் பெருமானுக்கு வாழ்க்கைத் துணைவியாக வழங்கினேன். இனி நான் தனித்து சென்று பெரிய தவத்தை மேற்கொள்வேன் எனக்கூறி நீலகேசிக்கு அறிவுரை பல கூறி தவம் செய்யச் சென்றார்.

"சேனையும் நகரமுஞ் சென்றுட னெதிர்கொள
ஆனாச் சிறப்போ டகன்மனை புகுதலிற்
தானை வேந்தன் தானெரி திரியான்
பூவிரி கூந்தற் பொங்கிள வனமுலைத்
தேவியர் மூவருந் தீமுன் னின்றவட்
குரியவாற்றி மரபறிந் தோம்பி
அருவிலை நன்கல மமைவர வேற்றிக்
குரவர் போலக் கூட்டுபு கொடுப்பக்"[30]

விருசிகை நல்லால் அமையாத பெருஞ்சிறப்போடு அகன்ற உதயணனின் அரண்மனைக்குள் புக வாசவதத்தையும் பதுமாபதியும் மானனீகையும் தேவிமார் மூவரும் மணவேள்வியின் முன்னின்று குறைவற்ற நூல் வழியாலே படைப் பெருக்கமுடிய உதயண மன்னனுக்குத் திருமணம் செய்வித்தனர்.

"கண்டார் உயர்உண்ணும் தோற்றத்தால் பெண்தகைப்
பேதைக்கு அமர்த்தன கண்"[31]

என்பதற்கேற்ப உதயணனுக்கு, பெண்மைகுணம் பொருந்திய இப்பேதையின் கண்கள் உதயணனின் உயிரை மாய்க்கச் சித்தமாகக் காத்திருப்பவைப் போல் காட்சியளித்தது

என்பதும் அறியலாகிறது. இங்கனம் நான்கு மனைவியரை உதயணன் மணந்தபோதும், முதலிடம் வகிப்பவள் வாசவதத்தை. முதற்காண்டத்தில் அறிமுகமாகி உதயணனின் வாழ்வே தனது வாழ்வாக எண்ணி காப்பியத்தின் இறுதிக் காண்டம் வரை பங்கேற்கிறாள். பதுமாபதி மகத காண்டத்தில் அறிமுகமாகி உதயணனின் அரசியல் தூதியாகவும், அவனது இல்லற வாழ்வுக்கும், வாசவதத்தைக்கு உற்ற தங்கைபோலும் காப்பிய இறுதிவரை இயங்குகிறாள். மானனீகை கலைகளிலும், பந்தாட்டத்திலும், யவனமொழிப் பயிற்சியில் வல்லவளாகவும், காப்பியச் சுவைக்குக் காரணமாகவும், படைப்பெருக்கத்திற்கு காரணமாகவும் விளங்குகிறாள். பெருங்கதையில் பெண் மாந்தர்கள் முதன்மையும் சிறப்பும் பெற்று இலங்குகின்றனர். இத்தகைய பெண்களை தகுதி, அன்பு இவற்றின் அடிப்படையில் தாய் என உயர்த்துகின்றது பெருங்கதை.

> **“உறுப்பு ஒத்தல் மக்கள்ஒப்பு அன்றால்; வெறுத்தக்க**
> **பண்புஒத்தல் ஒப்பதுஆம் உப்பு”**[32]

ஒருவன் நன்மக்களோடு உறுப்புகளால் ஒத்திருத்தல் சிறந்த ஒப்புமை ஆகாது. செரியத்தக்க பண்புகளால் ஒத்துரித்தலே பொருத்தமான ஒப்புமையாகும் என்ற குறளுக்கேற்ப தனது பண்புகளால் பெருங்கதைத் தலைவன் தலைவி இருவருக்கும் தாயாக விளங்குபவள் தான் இந்த சாங்கியத்தாய்.

சாங்கியத்தாய்

> **“ஓங்கிய ஒழுங்கின் உயர்ந்தோர் பேணி**
> **சாங்கியம் தாங்கிய சால்பனி படிமை**
> **வருமதி நுனித்த பெருமூதாட்டி”**[33]

எனப் பெருங்கதைப் போற்றும் சாங்கியத்தாய் சாங்கிய சமயத்தைச் சார்ந்தவள். பலசமயங்களின் கருத்துகளையும் கற்றுத் தேர்ந்தவள். பெண் அறமான கற்புத் திறம்பாமை என்பதிலிருந்து வழுவியதால் தண்டனை பெற்றவள். அத்தண்டனையிலிருந்து உதயணனால் நீக்கம் பெற்றபின், தம் வாழ்வைப் பெரிதென நினையாது உதயணன் வாசவதத்தை இருவரின் வாழ்வே பெரிதென நினைத்து வாழ்ந்தவள். பிரச்சோதன் அரண்மனையில் பதுமகாரிகைக்குத் தோழியாகிப் பின் வாசவதத்தைக்குச் செவிலித் தாயாகிறாள். தாய், சேய் இருவருக்கும் தொண்டு செய்யும் நிலையில் சாங்கியத்தாய் அமைந்தமையால் தவ மூதாட்டியாக உயர்ந்து காணப்படுகிறாள்.

வாசவதத்தைக்கு யாழ் பயின்றுங்காலத்தே உதயணனை மீண்டும் சந்திக்கிறாள் இருவரின் காதலுக்குப் பாலமாக அமைகிறாள். பிரச்சோதனன் வாசவதத்தையை

வேறிடத்தில் மணம் செய்து கொடுக்க இருப்பதை அறிந்து வாசவதத்தை கலங்கிய போது,

“இளமையும் வனப்பும் இல்லொடு வரவும்
வளமையும் தறுக்கணும் வரம்பில் கல்வியும்
தேசத் தமைதியும் மாசில் சூழ்ச்சியோடு
எண்வகை நிறைந்த நன்மகற்கு அல்லது
மகட்கொடை நேரார் மதியோர்”[34]

எனக்கூறி அவள் கவலையை மாற்றுகிறாள் சாங்கியத்தாய் காவல் பெண்டின் இயல்பும், வளர்ப்புத்தாயின் இயல்புகளும் கொண்டவள்.

“நிலைமைக் கொத்த நீதியை ஆகி
தலைமைக் கொத்த வதுவை எண் என
இழுக்கம் இல்லா இயல்போடு புணர்ந்த
ஒழுக்கம் எல்லாம் ஓம்படுத்து உரை”[35]

என உதயணுக்குத் தக்க சமயத்தில் அறிவுரைகூறி இடித்துத் திருத்துகிறாள் என்பதை நன்கறிய முடிகிறது. மேலும் உதயணன் சாங்கியத் தாயின் தண்டனையை நீக்கி சமுதாயத்தில் அவளும் ஒரு குடிமகள் என உரிமை தந்ததால் சாங்கியத் தாய்க்கு உதயநிமிடம் தாய் அன்பு ஏற்பட அவனை நோக்கி

“மன்னருங் காவன் மாபெருந்தேவி
திருவயிற் றியன்ற பெருவியறற் பொலிவே”[36]

என அழைப்பது உதயணன் பால் கொண்டிருந்த தாயன்பை உணர்த்துகிறது. அத்தாயின் பால் தான் சாங்கியத்தாய் எத்தவறும் செய்யாத உயர்ந்த நிலைக்கு மாறுகிறாள். நூலின் தொடக்கம் முதல் இறுதிவரை சாங்கியத்தாய் நிறைந்து நிற்கிறாள். சாங்கியத்தாய் அற நெறிகளை அரச மகளுக்கு கூறி ஊன்றுகோலாக உளவி வருகிறாள். சாங்கியத்தாய் காஞ்சனமாலை முதலான வாசவதத்தையின் தோழியருக்கும் இனியவளாக விளங்குகிறாள் என்பதறியலாகிறது. அதுபோல் வாசவதத்தையின் ஆருயிர்த் தோழியாக அமைந்தவள் காஞ்சனமாலை என்னும் அன்புத்தோழி.

காஞ்சனமாலை

இருதலைப் புள்ளின் ஒருயிர் போல வாசவதத்தையின் தோழியாக மட்டுமின்றி வாசவதத்தையை கண்ணை இமைப்போல் காக்கும் காவல் மகளாகவும் விளங்குகிறாள். வாசவாதத்தை உதயணனுடன் உடன்போக்கு செல்கையில் தானும் உடன் சென்றதுடன்,

வேடர்கள் அவர்களை வளைத்தபோது தத்தையைத் தீங்கு நேராது காத்துநிற்கிறாள். அல்லும் பகலும் வாசவதத்தையோடு உறையும் காவல்மகள்.

> **“அவந்திகை உவந்தவள் கண்மணி யனைய**
> **ஒண்ணுதற் பாவை காஞ்சன மாலை”[37]**

என்பதன்கண் வாசவதத்தையின் கண்மணி போன்றவள் என்பதும் புலனாகிறது. வாசவதத்தையைக் காக்கும் பொறுப்பு உதயணனால் ஒப்படைக்கப்பட்டது. எனவே வாசவதத்தையின் இன்பகாலத்தும் துன்பகாலத்தும் உடனுறைந்து ஆறுதல் கூறும் தோழியாக விளங்கிய காஞ்சனமாலை, வாசவதத்தை தீக்கிரையானதாகக் கேள்வியுற்றதும்,

> **"நாவலந் தண்பொழில் நண்ணார் ஒட்டிய**
> **காவலன் மகளே! கணங்குழை மடவோய்**
> **மண்விளக் காகி வரத்தின் வந்தோய்!**
> **பெண்விளக் காகிய பெறலரும் பேதாய்!**
> **பொன்னே! திருவே! அன்னே! அரிவாய்!**
> **நங்காய் நல்லாய் கொங்கார் கோதாய்!**
> **வீணைக் கிளத்தீ வித்தக உருவீ**
> **தேநேர் கிழவீ சிறுமுதுக் குறைவீ**
> **உதயண குமரன் உயர்த்துணைத் தேவீ**
> **புதையழ லகவயிற் புக்கனையோ?”[38]**

என புலம்பி அழும் சொற்களில் வாசவதத்தை மீது இவள் கொண்டிருந்த பேரன்பு புலனாகிறது. காஞ்சனமாலை பந்து விளையாட்டிலும் திறமை பெற்றவளாதலால் வாசவதத்தை சார்பில் ஏழு பந்துகளைக் கையில் ஏந்தி ஆயிரம் கை அடித்த இரசாயனையை இவள் புறங்காணுகிறாள். பந்துகளைக் கையிலேந்தி ஆயிரத்தைந்நூறும் கை அடித்து வெற்றியை உயர்த்தினாள். காஞ்சனமாலையும் காப்பியம் முழுவதும் பங்கு கொண்டிருப்பதை நன்கறிய முடிகிறது. மேற்காணும் பெண்கள் காப்பியம் முழுமையும் பயணித்தாலும் கதைநாயகன் நாயகியை ஈன்று முதலிடம் பெறுபவர்கள் இருவரின் தாயாரே.

மிருகாபதி

காப்பியத் தலைவனான உதயணனுடைய தாய் மிருகாபதி. உதயணனின் தோற்றத்துக்குக் காரணமானவள். மிருகாபதி ஏயர்குல மன்னன் சேடகனின் புதல்வி. வத்தவ நாட்டில் கோசம்பி நகரை ஆண்ட சதானிகன் என்னும் அரசனை மணக்கிறாள். இவள் கருவுற்றிருக்கும் போது பத்தாவது திங்களில் செந்நிற ஆடையால் தன்னை

போர்த்திக் கொண்டு அரண்மனை மாடத்தின் நிலாமுற்றத்தில் துயின்றாள். அப்பொழுது வான்வழியே பறந்து சென்ற வலிமைமிக்க சரபப் பறவை ஒன்று மிருகபாதியை செவ்வூன் திரள் (ஈரம் புலராத தசைத் தொகுதி) எனக் கருதித் தூக்கிக்கொண்டு உண்பதற்காக வான் வழியே பறந்து சென்றது. ஆலங்காட்டில் இருந்த சேடக முனிவரின் தவப்பள்ளியருகில் வைத்தது. அப்பொழுது மிருகபாபதி விழித்துக் கொண்டு அலறவே அப்பறவை உயிருள்ளதை உணர்ந்து அங்கிருந்து பறந்து சென்றது. வான்வழியே தூக்கி வரப்பட்டதால் அதிர்ச்சியுற்ற மிருகபாபதி உதய காலத்தில் ஒரு ஆண் குழந்தையை ஈன்றாள். அவ்வழியே நீராட வந்த சேடக முனிவரின் தாதிப் பெண்கள் இவளைக் குழந்தையுடன் அழைத்துச் சென்று தவப்பள்ளியில் சேர்த்தனர். தனது தந்தையின் தவக்குடிலுக்கு வந்ததும் தந்தையிம் மகளும் சந்தித்து மகிழ்ந்து உதய காலத்தில் பிறந்த மகனுக்கு உதயணன் என பெயர் சூட்டினர். பிரம்ம சுந்தர முனிவரிடம் கல்வி கேள்வியைக் கற்று அவரிடமிருந்து கோடவதி என்ற யாழைப் பெற்று இளம் வயதிலேயே அரசமுடி சூட்டும் வரை உதயணனுடன் பயணித்தவள் உதயணனின் தாய் மிருகாம்பதியாவாள்.

பதுமகாரிகை

மாமன்னன் பிரச்சோதனனின் பட்டத்தரசி கோப்பெருந்தேவி பதுமகாரிகை. பிரச்சோதனன் அறுபதினாயிரம் மனைவியரை உடையவனாகக் காட்டப்படினும் பட்டத்துத் தேவி பதுமகாரிகையாக விளங்குகிறாள். வாசவதத்தையின் தாயான பதுமகாரிகை அன்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இடம் பெறுபவள். பிரச்சோதனன் தன் மகளது திருமணத்தைப் பேச தனது மனைவியான பதுமகாரிகையிடம் கேட்டபின்பே முன்னெடுக்கிறான். வாசவதத்தை உதயணனை விரும்பி உடன்போக்கின் போது

> **“வாசவதத்தையை வலிதிற் கொண் டேகினும்**
> **தீது நிகழினு மேக மில்லென”[39]**

வருந்திய பிரச்சோதனனிடம் “மானமில்லை மற்றவன் மாட்டு” எனப்பரிந்துரைத்து, மகளது அன்புமயமான இல்வாழ்விற்கு மகிழ்கின்றாள் ஆனால் பெருங்கதையின் பிந்தைய காதைகளில் இடம்பெறவில்லை. இங்கனம் காப்பியம் முழுமையும் இடம்பெறா விடினும் பதுமாபதியின் உள்ளங்கவர் தோழியாக பயணித்தவள் யாப்பியாயினி.

யாப்பியாயினி

பதுமையின் பார்ப்பனதோழி. ஒருங்கு வளர்ந்தவள். உதயணனைப் பெற பதுமாபதியை இயக்கியவள் இவளே. உதயணனை சிவிகையுள் மறைத்து அழைத்து வந்து கன்னிமாடத்துள் தங்க வைத்தவள். பதுமையின் உளம் அறிந்தவள்.

தோழியர்

வாசவதத்தைக்கும் பதுமாபதிக்கும் தோழிப் பெண்கள் பலர் இருந்தனர். தோழியர், எண்ணிக்கையில் மிகுதியானோர் என்பதை,

> **“மம்மர் கொண்ட மனத்தினராகித்**
> **தோழியர் எல்லாம் பூமியூட் புரளவும்”**
> **“தண்ணீர் தோழியர் ஆட”**[40]

என்ற வரிகள் மூலம் அறிய முடிகின்றது. இவர்களை

> **“இன்னகை ஆயத்துப் பைந்தோடிச் சுற்றமும்”**[41]

இன்னகை ஆயம் எனப் பெருந்தகை குறிக்கின்றது. அரச மகளிர் அழகுற இருந்தாலும் பெருங்கதையில் பரத்தை மகளிரும் மிகுந்து காணப்படுகின்றனர்.

பரத்தை மகளிர்

வரலாறுக்கு எட்டாத காலம் தொட்டு பரத்தமை வாழ்வு, சமூகத்தில் இடம் பெற்றுள்ளது. சமூக வாழ்வின் அங்கமான பரத்தமை இடம்பெற்றுள்ள நிலை தமிழ் நூல்களில் காணக்கிடைக்கிறது.

> **“பயன்தூக்கிப் பண்புஉரைக்கும் பண்புஇல் மகளிர்**
> **நயன்தூக்கி நல்லா விடல்”**[42]

கிடைக்கக்கூடிய பயனை அளந்து பார்த்து அதற்கு ஏற்றவாறு இனிய சொல் கூறுகின்ற பண்பில்லாத பொது மகளிரின் நடத்தையை ஆராய்ந்து விட்டு விடுக என்று திருவள்ளுவர் பாடியுள்ளார். சீவகசிந்தாமணி, மணிமேகலை நூற்களில் பரத்தமை இழிவாகப் பேசப்பட்டுள்ளது. பெருந்தகைக் காப்பியத்தில் பரத்தையின் மகளை இளவரசன் திருமணம் முடிப்பதாக உயர்வு படுத்திருப்பது இடம்பெற்றுள்ளது. மேலும் பரத்தையர் பற்றிய செய்திகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. ஆடல் பாடலில் சிறந்த இப்பெண்கள் கற்பிலும் சிறந்து விளங்கினர் என்பதற்குச் சான்றாகிறாள் கணிகை மகள் நருமதை.

நருமதை

பெருங்கதையில் வரும் பரத்தையர்களில் குறிப்பிடத்தக்கவள் நருமதை. இவள் பிரச்சோதன மன்னனின் தலைநகரான உச்சயினி நகரக் கணிகை. ஐம்பதினாயிரம் நாடகக் கணிகையருள் தலைக்கோல் பட்டம் பெற்றவள்.

> **“தலைக்கோல் பெண்டிருள் தவ்வை ஒருமகள்**
> **நாடகக் கணிகை நருமதை என்னும்**
> **பாவை”**[43]

தாம் வாங்கும் பொருளுக்கு வஞ்சனையின்றி இன்பத்தை வழங்கும் இப்பரத்தையர் தம் இல்லம் கடந்து பிறர்வாழும் இடம்கட்கு செல்வதில்லை. இக்கொள்கைப் பெருங்கதையில் சுட்டடப்படுகிறது. உதயணன் வாசவதத்தையின் மேல் கொண்ட காதலால் உடல் மெலிந்து தோற்றம் மாறவே இதனை மறைத்து, தத்தைக்கும் களங்கம் நேராதிருக்கவும் தோழன் வயந்தகன் மூலம் கணிகை மகள் நருமதை மேல் காதல் கொண்டதாக கூறி அவளை அழைத்து வரச் சென்றபோது அவன் எத்துணைச் சிறப்பு உடையதாயினும் அயல் மனைக்கண் சேறேன் எனக்கூறிச் சீருகிறாள் நறுமதை. உதயணன் ஆணைப்படி பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டு, நருமதை வாசவதத்தையின் அன்பைப் பெற உதயணன் கையாளும் செயலுக்குத் துணையாகிறாள். இங்கனம் கோசம்பிநகரில் தலைக்கோற் பட்டம் பெற்ற இரண்டாயிரத்து ஐநூறு கணிகைமார்களுள் கற்புடையவள் மதன மஞ்சகையின் தாய் கலிங்கசேனை. இவளைக்

> **“காசில் சிறப்பிற் கலிங்கசேனை**
> **றோசை போகிய வொளியினளாகிய**
> **மாசில் கற்பின் மடமொழி”**[44]

குறிப்பால் அறிமுகப்படுத்துவதன் மூலம் மிகுதியான எண்ணிக்கையில் பரத்தைப் பெண்டிர் இருந்தனர் என்பதும் தெரியவருகிறது. அவர்களுள் கற்பில் சிறந்த கலிங்க சேனை போன்றோரும் இருந்தனர் என்பதையும் அறியமுடிகின்றது. கலிங்க சேனையின் மகள் மதன மஞ்சிகையை உதயண மன்னன் மகன் அரசிளங்குமரனான நரவாணதத்தன் மணம் செய்தமையும் பெருங்கதைச் சுட்டுகிறது. இதன் கண் கற்புடைப் பெண்ணாயின் அவள் குலம் பார்க்காமல் அரசனே திருமணம் முடிப்பான் என்ற கருத்தைக் கொங்கு வேளிர் வலியுறுத்துகிறார். பரத்தை மகளிர் மட்டுமன்றி காப்பியக் கதை முழுவதும் எண்ணற்ற மகளிர் பலர் இடம்பெற்றுள்ளனர். பெருங்கதைத் தொடக்கத்தில் உஞ்சைக் காண்டத்தில் இடம்பெறும் பாகீரதி ஒரு தேவராட்டிப் பெண்.

பாகீரதி

தேவராட்டிப் பெண்களின் சொல்லுக்கு மதிப்பு இருந்தமை இதன் கண் நன்கு புலனாகிறது. தெய்வமேரி ஆடுபவர்கள் தேவராட்டி எனப்பட்டனர். வஞ்சனையால் உதயணனை சிறைப்பிடித்த பிரச்சோதனன் மகள் வாசவதத்தையை கவர்ந்து செல்லக் கருதி பாகீரதி மூலம் தெய்வம் வந்தது போல் பிரச்சோதன மன்னன் முன் பேசி நீரட்டணி விழா நடத்தச் செய்து வாசவதத்தையைக் கவர்ந்து செல்கின்றனர். யூகியின் இத்திட்டத்திற்குப் பாகீரதி உடன்பட்டு செயலாற்றுகிறாள்.

பத்ராபதி

பிரச்சோதனனுக்குரிய பெண்யானை உதயணனுக்குக் கொடுக்கப்பட்டது. நீர் விழாவில் இதன் மேல் வாசவதத்தையை ஏற்றிக்கொண்டு உதயணன் சென்றான். பத்ராபதி என்னும் பெண் குபேரன் சாபத்தால் யானைப் பிறப்பெடுத்து இறந்தபின் பழைய உருவத்தை அடைந்தாள் என்பதைப் பெருங்கதைக் குறிப்பிடுகின்றது. இத்தகையோர் மட்டுமின்றி,பல்வகை மகளிர்.

பல்வகை மகளிர்

அரசமகளிர், வாணிக மகளிர், அந்தண மகளிர், காவிதி மகளிர், பெருங்குடி மகளிர், செவிலியர், கூனர், குறளர், காவன் மகளிர், ஏவன் மகளிர், உரிமை மகளிர், ஆடல் மகளிர், வண்ணமகளிர், குற்றவேல் புரியும் அடிமைமகளிர், கட்டறி மகளிர், மட்டுண் மகளிர் முதலானோரும் பெருங்கதையில் இடம் பெறுகின்றனர்.

முடிவுரை

சங்க காலத்திலும் அதனை அடுத்த காப்பிய காலத்திலும் புறவாழ்க்கையில் ஆண்கள் சிறந்து விளங்கியதைப் போலவே அகவாழ்க்கையில் பெண்கள் சிறந்து விளங்கினர். ஆனால் பெருங்கதையில் பெண்கள் முழுஉரிமையோடு வாழ்ந்துள்ளனர் எனலாம். அரசவைப் பெண்டிரும், அவர் தோழியரும் சமூகத்தில் முதன்மையிடம் பெற்றிருந்தனர். தனித்தியங்கும் தலைமை மாதர் திறம், பெண்ணின் கடமை, வழிவந்த உரிமை வாழ்வு முதலானவற்றையும் உயர்வாகப் பிரதிபலிக்கின்றது. ஆண்களை இயக்குபவராகவும், தாமே இயங்குபவராகவும் பெருங்கதையில் பெண்கள் விளங்கியமை எல்லா நிலைகளிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

சான்றோன் விளக்கம்

1. திருமந்திரம், பா-1142
2. பெண்கள்-பாரதியார் கவிதைகள்

3. கொங்கு வெளிர் பெருங்கதை, பா. 1-34:151-154
4. மேலது, பா.4-8:109:111
5. மேலது, பா.2-3:15,4-6:28,4-14:142,2-3:151
6. மேலது, பா.4-17:65
7. பெருங்கதை, பா, 1-38:266,267
8. திருக்குறள், 1093
9. கொங்குவேளிர் பெருங்கதை, 1-32:32-49
10. மேலது, பா.1-32:17,18
11. மேலது, பா.2:7:53-54
12. மேலது, பா.2:17:139-140
13. மேலது, பா.2-4:22-25
14. மேலது, பா.4-14:147-149
15. திருக்குறள்-986
16. பெருங்கதை, பா.3-15:22,23
17. மேலது, பா.3-6:39-41
18. மேலது, பா.4-8:92-94
19. மேலது, பா.4-8:10;4-9:15;4-11:84
20. மேலது, பா.4-14:96-99
21. திருக்குறள்-681
22. குறள்-685
23. பெருங்கதை, பா-4:10:13-35
24. மேலது, பா.4:12:142-245,265-270
25. மேலது, பா.4:13:88-90
26. மேலது, பா.4:13:115-120
27. மேலது, பா.4:14:177-182
28. பெருங்கதை, பா-4:15:83-88
29. மேலது, பா.4:15:114-116
30. மேலது, பா.4:17:105-112
31. திருக்குறள்-1084
32. குறள்-993
33. பெருங்கதை, பா-1:16:123-125
34. பெருங்கதை, பா-1:36:89-93
35. மேலது, பா.1:36:327-330
36. மேலது, பா.1:36:144-145
37. மேலது, பா.4:12:65-67

38. மேலது, பா.2:18:76-85
39. மேலது, பா.1:47:187-188
40. மேலது, பா.1:46:292-293;1:40:230
41. மேலது, பா.1:36:305
42. திருக்குறள்-912
43. பெருங்கதை, பா-1:35:72-74
44. மேலது, 5:8:59-61a

துணைநூற்பட்டியல்

1. அடியார்க்குநல்லார். *சிலப்பதிகாரம்*. சென்னை, 10வது பதிப்பு, உ.வே. சுவாமிநாதய்யர் நூலகம்.
2. அழகர் நம்பி. *திருமந்திரம், மூலமும் உரையும்*. சென்னை, 1வது பதிப்பு, கவிதா வெளியீடு.
3. பி எஸ், ஆச்சார்யா. *திருவள்ளுவர் வழங்கிய திருக்குறள்*. சென்னை, நர்மதா வெளியீடு, 2014.
4. எஸ், செல்லப்பன். *பெருங்கதை ஆராய்ச்சி*. சென்னை, பாரதி பதிப்பகம்.
5. என் ஆர், சென்னியப்பன். *பெருங்கதை ஓர் அறிமுகம் கொங்குவேளாளர் சமூகமத இடை*. 1984.
6. பி வி, சோமசுந்தரர், *கொங்கு வேளிர் இயற்றிய பெருங்கதை*. சென்னை, திருநெல்வேலியின் தென்னிந்திய சைவ சித்தாந்தப் பதிப்பகச் சங்கம், 1963.
7. என், பொன்மதி. *ஆய்வறிக்கை*. மதுரை, வி.வி. வன்னியர் பெருமாள் மகளிர் கல்லூரி, காமராஜர் பல்கலைக்கழகம், 1990.
8. பாரதியார். *பெண் பாரதியார் கவிதைகள்*. விழிமா, அக்டோபர் 11 2022. https://www.vizhimaa.in/2022/10/pengal-bharathiyar-kavithaigal-in-tamil.html?m=1

REFERENCES

1. AdiyarkuNallar. *Silapathikaram*. Chennai, 10th Edition, U V Swaminathaiyar Library.
2. Azhagar Nambi. *Thirumandhiram, Moolamum Uraiyum*. Chennai, 1st Edition, Kavitha Publication.
3. B S, Aacharya. *Thiruvalluvar valangiya Thirukkural*. Chennai, Narmadha Publication, 2014.
4. S, Chellappan. *Research Perungathai*. Chennai, Bharathi Padhipagam.
5. N R, Chenniyappan. *Perungathai Orr Arimugam KonguVellalar Samugamatha Idhazh*. 1984.
6. P V, Somasundarar. *Kongu Velir iyartriya perungathai*. Chennai, Tirunelveli's South Indian Saiva Siddantha Publishing Society, 1963.
7. N, Ponmathi. *Thesis*. Madurai, V.V Vaniyar Perumal Women's College, Kamarajar University, 1990.
8. Bharathiyar. *Pengal Bharathiyar Kavithaigal*. Vizhimaa, October 11 2022. https://www.vizhimaa.in/2022/10/pengal-bharathiyar-kavithaigal-in-tamil.html?m=1